**வரையறுக்கப்பட்ட இலங்கை இளைஞர் சேவைகள் தனியார் கம்பனியின் - 2019/2020**

---

வரையறுக்கப்பட்ட இலங்கை இளைஞர் சேவைகள் தனியார் கம்பனியின் 2020 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாடுகள் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

---

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும். பிரிவு 16(2) இன் பிரகாரம் ஒவ்வொரு கணக்காய்வு நிறுவனத்திற்குமான வருடாந்த நிதிக்கூற்றுக்கள், பிரதான கணக்கீட்டு அலுவலரால் வருடாந்த செயலாற்றல் அறிக்கைகளுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு விதிகளினால் வழங்கப்படுகின்ற காலத்திற்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். உபபிரிவு 38(1)(ஈ) இன் பிரகாரம் வருடாந்த மற்றும் நிதிக்கூற்றுக்களை சரியான நேரத்தில் சமர்ப்பிப்பதை உறுதி செய்வதுடன் அதற்கு மேலதிகமாக கணக்காய்வு நிறுவனம் தொடர்பாக வருடாந்த அறிக்கைகளைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கும் பிரதான கணக்கீட்டு அலுவலர் வேண்டப்படுகின்றார்.

**2. ஏனைய சட்ட மற்றும் பிரமாணங்களின் தேவைப்பாடுகள் மீதான அறிக்கை**

---

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் என்பன பின்வரும் தேவைப்பாடுகளுக்கான குறிப்பிட்ட ஏற்பாடுகளை உள்ளடக்கியுள்ளது.

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 150(1) ஆம் பிரிவின் பிரகாரம் ஐந்தொகைத் திகதியின் ஆறு மாதத்திற்குள் நிதிக்கூற்றுக்கள் அவற்றின் தயாரிப்பிற்கு பொறுப்பான நபரினால் சான்றுறுதிப்படுத்தப்படுவதை கம்பனியின் பணிப்பாளர் சபை உறுதி செய்ய வேண்டும்.

**2.1 நிதிக்கூற்றுக்கள்**

---

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் அரச கம்பனிகளின் வருடாந்த நிதிக்கூற்றுக்கள் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய | 2019/2020 ஆம் வருடங்களுக்கான நிதிக்கூற்றுக்கள் தயாரித்து முடிந்த பின்னர் பெப்ரவரி 15 ஆந் திகதி வரையில் சமர்ப்பிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றிக்கைப் பிரகாரம் குறிப்பிட்ட தினத்தில் கணக்குகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

போதிலும், கம்பனியில் 2019/2020 ஆம் நிதியாண்டுகளுக்கான நிதிக்கூற்றுக்கள் 2022 சனவரி 31 ஆந் திகதி வரையில் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

**2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 41 (2) (எ) பிரிவு | 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட அல்லது பதிவு செய்யப்பட்டுள்ளதாகக் கருதப்படுகின்ற மற்றும் அதன் பங்குகளில் ஐம்பது சதவீதம் அல்லது அதற்கு மேற்பட்ட சதவீதத்தை அரசு அல்லது அரச கூட்டுத்தாபனம் அல்லது உள்ளூராட்சி மன்ற நிறுவனங்கள் வைத்திருந்தால் அக் கம்பனிகளில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நிறுவப்பட வேண்டிய போதிலும், கம்பனியால் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நிறுவப்பட்டு மேற்கொண்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுவதற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் அறிவுறுத்தல் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2016 இன் 12 ஆம் இலக்க தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் 23.1 (அ) பிரிவு | கம்பனியின் தகவல்கள் அதிகாரியாக ஒரு அதிகாரி அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் மற்றும் மேன்முறையீடுகளை விசாரிப்பதற்கு பெயர் குறிப்பிடப்பட்ட ஒரு அதிகாரியும் | எதிர்காலத்தில் அதன் பிரகாரம் குறிப்பிட்ட அதிகாரி ஒருவர் விரைவில் நியமிப்பதற்கு முகாமைத்துவப் பணிப்பாளருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் அறிவுறுத்தல் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | நியமிக்கப்பட வேண்டிய போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | | |
| (இ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களச் சுற்றறிக்கையின் | | | | |
| | (i) | 4.2.2. ஆம் பந்தி | கம்பனியினால் செயலாற்றல் மதிப்பீடு மற்றும் தேவையான கட்டுப்பாடொன்று நிறுவப்படுவதற்காக பணிப்பாளர் சபை மாதாந்தம் கூட்டப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டில் மற்றும் கடந்த வருடத்தில் முறையே இரு சந்தர்ப்பங்களில் மற்றும் ஒரு சந்தர்ப்பத்தில் மட்டுமே பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருந்தன. | தற்போது எமது பணிப்பாளர் சபை அனைத்து மாதங்களிலும் நடாத்தப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. | சுற்றறிக்கையின் அறிவுறுத்தல் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| | (ii) | 5.2.3 மற்றும் 4 ஆம் பந்திகள் | வருடாந்த வரவு செலவுத் திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | வரவு செலவு திட்டம் தயாரிக்கப்படுவதற்கான விசேட கவனம் கோரப்பட்டு நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் அறிவுறுத்தல் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| | (iii) | 7.4.5 ஆம் பந்தி | நிலையான சொத்துக்கள் மற்றும் களஞ்சியசாலைப் பொருட்களுக்கான வருடாந்த பொருட் கணிப்பீட்டுச் சபை மற்றும் விசேட கணிப்பீட்டுச் சபை மற்றும் விசேட கணிப்பீட்டுச் சபை நியமிக்கப்பட்டு பொருட் கணிப்பொன்று மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், 2016 ஆம் வருடத்தின் பின்னர் பொருட் | தற்போது பொருட் கணிப்பீட்டுச் சபையொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன், பொருட் கணிப்பீடு மேற்கொள்ளப்படுவதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் அறிவுறுத்தல் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கணிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | | |
| (iv) | 9.2 மற்றும் 9.3.1 ஆம் பந்திகள் | கம்பனிக்கான பதவியணி அங்கீகரிகப்பட்டிருக்காத துடன் ஆட்சேர்ப்பு நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருக்கவி ல்லை. | தற்பொது ஆட்சேர்ப்பு நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டு வருவதுடன் எதிர்காலத்தில் பணிப்பாளர் சபை மற்றும் அமைச்சின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்படுவதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் அறிவுறுத்தல் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | வணிக நடவடிக்கைகளுக்காக குறுங்கால மற்றும் நீண்டகால தூரநோக்குடன் ஒருங்கிணைந்த திட்டமொன்று மற்றும் எதிர்வரும் நிதியாண்டில் செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ள செயற்பாடுகளை உள்ளடக்கியதான வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தற்போது தயாரிக்கப்பட்டு வருகின்றது. | சுற்றறிக்கையின் அறிவுறுத்தல் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | அரச பெறுகை வழிகாட்டிக் கோவையின் 3.4.3 (அ),(ஆ),(இ),(ஈ) | தொடர்ந்தும் பயன்படுத்தப்படுகின்ற பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக வருடாந்தம் புதுப்பிக்கப்படுகின்ற பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களின் பட்டியல் பயன்படுத்தப்பட வேண்டியுள்ள போதிலும். கம்பனியின் கீழ் உள்ள உணவகத்திற்கான பொருட்கள் கொள்வனவு, செய்யப்படும் போது அதன் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை. | தற்போது வழங்குநர்களை பதிவு செய்கின்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதுடன் அதன் பிரகாரம் எதிர் காலத்தில் நடவடிக்கை எடுப்பதற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் அறிவுறுத்தல் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஊ) | அரச பெறுகை வழிகாட்டிக் கோவையில் 4.2.1 (அ) | பெறுகைப் பிரிவினால் பிரதான பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், கம்பனியில் அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் அறிவுறுத்தல் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வரையறுக்கப்பட்ட இலங்கை இளைஞர் சேவைகள் தனியார் கம்பனிக்காகக் கணக்காளர் ஒருவரை நியமிப்பதற்காக 2013 ஆம் வருடத்திலிருந்து நடவடிக்கை எடுக்கப்படாததுடன் உதவிக் கணக்காளர் பதவியும் 2019 யூன் 03 ஆந் திகதியிலிருந்து வெற்றிடமாகக் காணப்பட்டது. இந் நிலைமை இறுதி நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்குச் சரியான நேரத்தில் சமர்ப்பிக்கப்படாமைக்கான காரணமாக இருந்தது. | 2022 ஆம் வருடத்தில் புதிய நிதி ஆலோசகர் ஒருவரை ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் விரைவில் நிதிக் கூற்றுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படுவதற்கான அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் வெற்றிடங்கள் நிருப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | கம்பனியின் உணவகத்தின் மூலம் செயற்படுத்தப்படக் கூடிய உணவுக் கட்டளைகள் கம்பனியின் மூலம் பெறுகைச் செயற்பாடுகளைப் பின்பற்றாது 03 சந்தர்பங்களில் மொத்தம் ரூபா 1,685,900 செலவிடப்பட்டு வெளியார் நிறுவனமொன்றின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வந்தமையால் கம்பனிக்கு கிடைக்க கூடியதாகவிருந்த இலாபம் உழைக்கக் கூடிய சந்தர்ப்பம் தவறவிடப்பட்டிருந்தது. | கிடைக்கின்ற கட்டளைகளின் தன்மையின் பிரகாரம் எமது உணவகத்திற்கான வசதிகள் மற்றும் சேவை வழங்கல் இல்லாத சந்தர்ப்பங்களில் வெளியார் சேவைகள் வழங்கப்பட்டுள்ளதுடன், தற்போதும் கட்டளைகள் பெறப்பட்டு எமது கோரிக்கையின் பிரகாரம் வெளியார் நிறுவனத்தின் மூலம் சேவைகளை வழங்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேற்கொள்ளப்படுகின்றதென்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | வியாபார நடவடிக்கைகள் இலாபத்தை வழங்கக் கூடிய நிலைமையில் பேணப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**4. நிலைபேறான அபிவிருத்தி**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| ஐக்கிய நாடுகளின் அமைப்பினால் 2030 ஆம் ஆண்டளவில் அதன் அமைப்பிற்கு உரித்தான அனைத்து நாடுகளிலும் பொருளாதார வளர்ச்சி மற்றும் சமூக மேம்பாடு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பை வழங்குவதன் அடிப்படையில் அறிமுகப்படுத்தப்பட்ட ‘‘நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் 2030’’ - இல் தமது விடயப்பரப்பின் கீழ் வருகின்ற நிலைபேறான அபிவித்திக் குறிக்கோள்களை கண்டறிந்து செயற்படுத்துவதற்கு கம்பனி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | விசேட கவனமொன்று கோரப்பட்டு அதற்கான நடவடிக்கைகள் எதிர்காலத்தில் எடுக்கப்படுவதற்கான அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | தேசிய கொள்கைகள் 10 மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் 2017 ஆகஸ்ட் 14 ஆந் திகதிய NP/SP/SDG/17 ஆம் இலக்கக் சுற்றறிக்கைப் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |